சபரகமுவ மாகாண ஆரம்பக்கல்விப் பிரிவு

# சிசு சவிய - 2023

## தரம் - 5

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்காகவும், உதவிப் பணம் வழங்குவதற்காகவும் தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தம் செய்வதற்காக நடாத்தப்படும் முன்னோடிப் பரீட்சை**

**வினாத்தாள் 1**

**01 மணித்தியாலம்**

*இது பரீட்சையல்ல, என்பதோடு பிள்ளைகளின் அடைவு மட்டத்தினை அறிவதற்காக மாத்திரம்*

**சுட்டெண் : ..........................................**

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்.**


- பரீட்சை சுட்டெண்ணை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் எழுதவும்.
- உமது சுட்டெண்ணை மூன்றாவது பக்கத்திலும் உரிய இடத்தில் எழுதவும்.
- வினாத்தாளில் 40வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதவும்.
- ஒவ்வொரு வினாவிற்கும் 3 விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.

**விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்கு மாத்திரம்.**

| பக்க இலக்கம் | பெற்றுக்கொண்ட புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| இறுதிப் புள்ளி | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |


| | கையொப்பமும் குறியீட்டு இலக்கமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கல் திட்டத்தின் படி மதிப்பீடு செய்யப்பட்டது. | <br>V/II/S |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரி என்பதை உறுதிபடுத்துகின்றேன். | <br>V/II/S |
| **மதிப்பீட்டுப் புள்ளி உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பீட்டுப் புள்ளி, வழங்கப்பட்ட புள்ளி, இறுதிப் புள்ளி சரியென உறுதிப்படுத்துகின்றேன். | <br>V/II/S/EMF |
| **பிரதான பரீட்சகர்**<br>மதிப்பீடு செய்தேன். இறுதிப் புள்ளி சரியானது. | <br>V/II/S/CH |

1. கீழே தரப்பட்டுள்ள படம் தொடர்பாக மிகச் சரியான கூற்று



1. பாய் மரக்கப்பல் துறைமுகத்தில் நங்கூரம் இட்டு நிறுத்தப்பட்டுள்ளது.
2. பாய்மரக் கப்பல் கடலில் முன்னோக்கிச் செல்கின்றது.
3. பாய்மரக் கப்பல் துறைமுகத்தில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளது அல்லது கடலில் முன்னோக்கிச் செல்கின்றது என சரியாகக் கூறமுடியாது.

2. கீழே தரப்பட்டுள்ள படத்திற்கு அமைவாக மீன் இருக்கக்கூடிய முயல் இருக்க முடியாத இடம் முறையே





1. C , A
2. A , B
3. A , C

3. கீழே தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்கு மிகவும் பொருத்தமாக ஒழுங்கு முறையில் தரப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

**தேனீ மிகவும் ...................... பிராணியாகும். தூர பிரதேசங்களுக்கு பறந்து சென்று ........................... உள்ள தேனை உறிஞ்சி .............................. சேமித்து வைக்கும்.**

1. சோம்பேறி, பூக்களுக்கு, வீட்டில்
2. சுறுசுறுப்பான, தேன் இராட்டுகளில், பூக்களில்
3. சுறுசுறுபபான, பூக்களில், தேன் இராட்டிலே

4. கீழே தரப்பட்டுள்ள படத்திலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை ?



1. 16
2. 17
3. 18

5. முதலாவது படத்தின் எஞ்சிய பகுதிக்குப் பொருத்தமான படத்தைத் தெரிவு செய்க.





1.





2.





3.


- இலக்கம் 6,7 ஆகிய வினாக்களில் இடைவெளிக்குப் பொருத்தமான படத்தைத் தெரிவு செய்க.


6. 



1.



2.


3. (iii)


7. 


1. (i)


2. (ii)



3. (iii)

8. கீழே தரப்பட்டுள்ள படத்தில் 14 சதுரங்கள் காணப்படுகின்றன. அவ்வாறு காணப் படுகின்ற சதுரங்களில் அவற்றை 30 ஆக அதிகரிப்பதற்கு மேலும் எத்தனை சதுரங்களை சேர்க்க வேண்டும் ?



1. 5
2. 7
3. 9

9. அளவில் சிறிய சதுரமுகிகளைக் கொண்டு ஆக்கப்பட்டுள்ள திண்ம வடிவத்தில் நிழற்றப் பட்டுள்ள பகுதியினூடாக அடுத்த பக்கத்திற்கு துளையிடப்பட்டு சிறிய சதுரமுகி அகற்றப் பட்டது. மீண்டும் இடைவெளியை மூடுவதற்காக சிறிய சதுரமுகி வைக்கப்பட்டது. துவாரத்தை முழுமையாக மூடுவதற்கு பயன்படுத்திய சதுரமுகிகளின் எண்ணிக்கை எத்தனை ?



1. 7
2. 8
3. 9


10. தோடம்பழம் 6 அப்பிள் பழம் 5 ஆகியவற்றின் விலை, தோடம்பழம் 3 அப்பிள் பழம் 14 இன் விலைக்குச் சமனாகும். இதனடிப்படையில் தோடம்பழம் 5 இன் விலை சமனாவது எத்தனை அப்பிள் பழங்களுக்கு என்பதைக் காண்க.

1. 12 2. 15 3. 18

11. பிள்ளைகளின் வரிசையில் யதிஸ்கனா 21 ஆவது இடத்திலிருப்பதோடு அவர் வரிசையில் நடுவிலும் இருகிறார். மோனேஸ் வரிசையில் 22 ஆக இருக்கின்றார். மோனேஸ் நடுவில் இருப்பதற்காக மாற்றம் செய்யக்கூடாத செயல்

1. வரிசையின் இறுதியில் ஒருவரை இணைத்தல்
2. வரிசையில் முன்னாலிருப்பவரை வரிசையின் இறுதியில் அமர்த்துதல்
3. வரிசையின் இறுதியில் 2 மாணவர்களை இணைத்தல்

- **கீழே தரப்பட்டுள்ள சக்கரத்தில் வெளியிலுள்ள சக்கரம் வலது பக்கமாகவும் உள்ளே இருக்கின்ற சக்கரம் இடது பக்கமாகவும் சுற்றமுடியும். அதனை அடிப்படையாகக்கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**





12. இங்கு உள்ளே இருக்கின்ற சக்கரத்தை மாத்திரம் 5 இடங்கள் சுற்றிய போது பச்சை நிறத்திற்கு வெளியே இருக்கும் இலக்கம் யாது ?

1. 10 2. 70 3. 80

13. மேலே தரப்பட்டுள்ள சக்கரத்தின் அமைப்பின் படி வெளிச்சக்கரத்தில் மட்டும் 6 இடங்கள் சுற்றிவிட்டு நிறுத்திய பின்னர் இலக்கம் 30க்கு முன்னால் இருக்கவேண்டிய வர்ணம் யாது ?

1. கருப்பு 2. சிவப்பு 3. வெள்ளை

14. கோலத்தை இனங்கண்டு A, B எழுத்துகளுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




1. 50, 100 2. 90, 45 3. 100, 50

15. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் செங்குத்தாக, கிடையாக, ஒவ்வொரு மூலைக்கும் அருகிலிருக்கின்ற இலக்கங்களின் கூட்டுத்தொகை 15 ஆக வரும் சந்தர்ப்பங்கள் எத்தனை ?

| | | |
|---|---|---|
| **1** | **6** | **7** |
| **2** | **5** | **8** |
| **3** | **4** | **9** |

1. 3
2. 4
3. 5

16. தனாஜிடம் 18 டொப்பிகளும் ஆரியாவிடம் 20 டொப்பிகளும் அஸ்வினிடம் 25 டொப்பிகளும் இருந்தன. மூவரிடமிருந்த எல்லா டொப்பிகளையும் ஒரு கூடைக்குள் போட்டதன் பின்னர் இம்மூவரும் சமனாக பிரித்துக்கொண்டனர். பிரித்துக்கொண்டதன் பின்னர் கூடிய டொப்பிகளைப் பெற்றவர், குறைந்த டொப்பிகளைப் பெற்றவர்கள் முறையே,

1. அஸ்வின், தனாஜ் 2 . தனாஜ், அஸ்வின் 3. ஆரியா, அஸ்வின்

17. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கட்டங்களிலும் இருக்கின்ற பழங்கள் அதற்கு முன்னால், கீழேயுள்ள மாணவர்கள் விரும்பும் பழங்களாகும். தர்ப்பூசணி, வேறு ஒரு பழத்தை 4 மாணவர்கள் சாப்பிட விரும்புகின்றனர். அதனடிப்படையில் வெற்றிடத்தில் வரவேண்டிய பழம் யாது ?

| | | | |
|---|---|---|---|
| | | | கமால் |
| | | குமார் | தர்ப்பூசணி |
| | நிமல் | திவுள் | அப்பிள் |
| சந்துன் | தர்ப்பூசணி | திராட்சை | ................ |

1. திராட்சை
2. அப்பிள்
3. திவுள்

- **கீழே தரப்பட்டுள்ள தகவலின் அடிப்படையில் 18,19 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

✷ பசிந்து, கசுன், ஜனித், தாரக, நுவன் என்று 5 பாடசாலை மாணவர்கள் உள்ளனர்.
✷ பசிந்து, நுவனிடம் நீல நிற புத்தகப்பையும் ஏனையோரிடம் கருப்பு நிற புத்தகப்பை யும் இருக்கின்றது.
✷ பசிந்து, தாரக இருவரின் பைகளில் சிவப்பு நிற வட்டவடிவிலான சின்னமும் நுவன், கசுன் ஆகியோரின் பைகளில் மஞ்சள் நிற முக்கோண வடிவிலான சின்னமும் ஒட்டப்பட்டுள்ளது.


18. இதனடிப்படையில் சிவப்பு நிற வட்ட வடிவம், நீல நிற புத்தகப்பை உடையவர்

1. பசிந்து 2. கசுன் 3. தாரக

19. மேலே தரப்பட்டுள்ள தகவலின் அடிப்படையில் பிழையான கூற்று

1. நுவனிடம் மஞ்சள் நிற முக்கோண வடிவிலான நீல நிற புத்தகப்பை இருக்கின்றது.
2. தாரகவிடம் சிவப்பு நிற சின்னமுடைய கருப்புநிற புத்தப்பை இருக்கின்றது.
3. ஜனித்திடம் நீலநிற முக்கோண வடிவ கருப்பு நிற புத்தகப்பை இருக்கின்றது.


- **கீழே 1 ரூபாய், 2 ரூபாய், 5 ரூபாய் ஆகின மூன்று என்ற அடிப்படையில் அடுக்காக வைக்கப்பட்டுள்ளது.**




20. ஒரு அடுக்கில் 1 நாணயம், 2ஆவது அடுக்கில் 2 நாணயங்கள், 3ஆவது அடுக்கில் 3 நாணயங்கள் என்றவாறு சேர்த்து மொத்தமாக பெறக்கூடிய ரூபாயின் பெறுமதி எவ்வளவு ?

1. ரூபாய் 12 2. ரூபாய் 17 3. ரூபாய் 20

21. கீழே தரப்பட்டுள்ள பூவை வெட்டியெடுப்பதற்கு சதுரவடிவிலான தாளொன்று மடிக்கப்படவேண்டிய தடவைகள் தொடர்பான சரியான விடையினைத் தெரிவு செய்க.



1. 2
2. 3
3. 4

22. மணித்தியாலத்திற்கு 80km வேகத்தில் செல்கின்ற பேருந்து 200km செல்வதற்கு தேவையான காலம் எவ்வளவு ?

1. 2 மணித்தியாலம் 30 நிமிடம்   2. 30 நிமிடம்   3. 2 மணித்தியாலம் 40 நிமிடம்

- **கோலத்தை இனங்கண்டு விடை தருக.**

○ × □ = △          □ + □ = ○          ○ × ○ = 36

23. △ பெறுமதி எவ்வளவு ?

1. 14   2. 18   3. 20

24. ○ + □ + △ = ?

1. 27   2. 25   3. 26

25. 200 மீற்றர் ஓட்டப்போட்டி தொடர்பாக A,B,C என்ற வகையில் 3 கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - குமாரிக்கு முன்னதாக நயனா போட்டியை முடிவு செய்தார்.
B - 6 போட்டியாளர்கள் போட்டியை நிறைவு செய்தது குமாரிக்கு அடுத்த படியாக
C - 8 போட்டியாளர்கள் போட்டியில் பங்குபற்றினர்.

போட்டியில் 1ஆவது யார் என்பதையறிய தேவையான கூற்று,

1. A,B   2. A,C   3. A, B ,C


26. ஒரு வரிசையில் 60 கொடிகள் நாட்டப்பட்டுள்ளன. அதில் 28ஆவது கொடியிலிருந்து 52ஆவது கொடி வரை எடுக்கப்பட்டு புறம்பாக நாட்டப்பட்டது. அவ்வாறு நாட்டப்பட்டதன் பின்னர் நடுவில் அமையும் கொடி யாது ?

1. 12   2. 13   3. 14

27. A பாத்திரத்தில் 8*l*, B பாத்திரத்தில் 4*l* என்றவாறு நீர் காணப்படுகின்றது. A பாத்திரத்திலிருந்து 4*l* நீர் B பாத்திரத்திற்கு இட்டதோடு B பாத்திரத்திலிருந்து 2*l* நீர் A பாத்திரத்திற்கு இடப்பட்டது. தற்போது இரண்டு பாத்திரத்திரங்களிலும் இருக்கின்ற நீர் தொடர்பாக யாது கூறமுடியும் ?

1. A பாத்திரத்திலும் பார்க்க B பாத்திரத்தில் நீர் அதிகம்.
2. B பாத்திரத்திலும் பார்க்க A பாத்திரத்தில் நீர் அதிகம்.
3. A ,B ஆகிய இரண்டு பாத்திரங்களினதும் நீரின் அளவு சமன்.

28. கீழே தரப்பட்டுள்ள தகரத்தில் நிழற்றப்பட்டுள்ள பகுதி வெட்டி அகற்றப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 4 பகுதிகளில் சுற்றியுள்ள தூரம், வெட்டி ஒதுக்கப்பட்ட பகுதியைச் சுற்றியுள்ள அளவிற்கு மேல்




1. அதிகம்
2. குறைவு
3. சமனாகும்

29. அக்கா எனக்கு சிவப்பு, மஞ்சள் நிற பூக்கள் சம அளவில் கொடுத்தார். தங்கையும் என்னிடமுள்ள பூவின் அரை பங்கு குறிப்பிட்ட இரண்டு நிறங்களில் அக்காவுக்கு கொடுத்தார். எங்கள் இருவருக்கும் கிடைத்த பூக்களின் எண்ணிக்கை 24. எனக்கு கிடைத்த சிவப்பு நிற பூக்கள் எத்தனை ?


1. 12    2. 16    3. 8

30. கீழே தரப்பட்டுள்ள தராசினை அவதானித்து 3ஆவது தராசிலுள்ள வட்டக்காயின் நிறையைக் காண்க.





1. 6 kg    2. 8 kg    3. 9 kg

31. கீழேயுள்ள நீர்த்தாங்கியில் நீர் நிரப்பப்பட்டுள்ளது. அதிலிருந்து குழாயினூடாக நிமிடத்திற்கு 4l நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்த்தாங்கி முழுமையாக வெற்றிடமாவதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு ?




1. 4 மணித்தியாலம்
2. 5 மணித்தியாலம்
3. 6 மணித்தியாலம்


32. பரிசுப் பொதியொன்றைச் சுற்றி நூலினால் கட்டப்பட்டுள்ள முறை படத்தில் காட்டப்பட்டுள்ளது. அந்த நூலை அகற்றி நீட்டி வைத்த பின்னர் நூலின் மொத்த நீளம் எவ்வளவு ?




1. 140 cm
2. 120 cm
3. 160 cm

* **தரப்பட்டுள்ள தகவலை அடிப்படையாகக்கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.**

* பழக்கடையில் காணப்படும் பழங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



33. இந்த பழக்கடையில் குறைவாக, கூடுதலாக காணப்படும் பழங்கள் முறையே

1. மங்குஸ்தான், அன்னாசி 2. திவுள், ஆனைக்கொய்யா 3. அன்னாசி, திவுள்

34. பரீட்சை வினாத்தாள் ஒன்றில் 20 வினாக்கள் இருக்கின்றன. சரியான ஒவ்வொரு விடைகளுக்கும் 5 புள்ளிகள் வழங்கப்படுவதோடு பிழையான விடைகளுக்கும் 2 புள்ளிகள் குறைக்கப்படும். பரீட்சை வினாத்தாளுக்கு விடையெழுதிய நதீஷாவுக்கு கிடைத்த புள்ளிகள் 58 ஆகும். இவர் சரியான விடைகளை எழுதிய வினாக்கள் எத்தனை ?

1. 16 2. 14 3. 18

35. பெஞ்ச் ஒன்றில் நண்பர்கள் 5 பேர் அமர்ந்துள்ளனர். நயனிக்கு வலது பக்கமாக அமாலியும், அமாலிக்கு வலது பக்கமாக கமலாவும் அமர்ந்திருக்கின்றனர். நிமாலி சுமனாவுக்கு வலது பக்கமாக இருப்பதோடு நயனிக்கு இடது பக்கமாக இருக்கின்றார். இதன் படி நடுவில் இருப்பவர்

1. நிமாலி 2. அமாலி 3. நயனி

36. [9] [3] [6] [4] என்று எழுதப்பட்ட 4 அட்டைகள் காணப்படுகின்றன. எழுமாறாக ஒரு தடவைக்கு 2 அட்டைகள் எடுக்கப்பட்டு ஈரிலக்க எண்கள் ஆக்கப்பட்டன. அவ்வாறு ஆக்கக்கூடிய ஒன்றுக்கொன்று வேறுபட்ட ஈரிலக்க எண் சோடிகள் எத்தனை ?

1. 8 2. 6 3. 12

37. நிமல் தனது 10ஆவது பிறந்த நாளை கொண்டாடியது கடந்த 2 வருடங்களுக்கு முன்பு. அப்போது தெவிந்துவின் வயது 4 ஆகும். இதனடிப்படையில் நிமல், தெவிந்துவின் வயது தொடர்பான கூற்றைத் தெரிவு செய்க.

1. இன்னும் 2 வருடங்களில் தெவிந்துவின் வயது 7 ஆகும்.
2. இப்போதைக்கு நிமலின் வயது தெவிந்துவின் வயதைப் போல இரண்டு மடங்காகும்.
3. இப்போதைக்கு இருவரினதும் வயதின் 4 கூட்டுத்தொகை 20 ஆகும்.

38. துஸான் தனது வீட்டிலிருந்து 300 மீற்றர் வடக்கு நோக்கிச் சென்று பாடசாலைக்குச் சென்று அதன் பிறகு 150 மீற்றர் கிழக்கு நொக்கிச் சென்று துஷாரவை சந்தித்து அங்கிருந்து 100 மீற்றர் தென் திசைக்குச் சென்று அமிலவை சந்தித்தார். தற்போது துஸான்கு தனது வீடு தென்படும் திசை யாது ?

1. தென்கிழக்கு 2. தென்மேற்கு 3. வடமேற்கு

39. நாளொன்றுக்கு 10 மணித்தியாலங்கள் வேலை செய்யும் ஒரு மனிதன் 12 நாட்களில் வெட்டப்பட்ட கால்வாய், 2 நாட்களில் வெட்டி முடிக்க வேண்டுமாயின், இவரைப் போன்று வேலை செய்யக்கூடிய எத்தனை மனிதர்கள் தேவை

1. 8 2. 12 3. 6

40. ●●● = ☒☒☒☒ உடன் ◆◆ = ●●●● ஆகும். இத்தொடர்புகளை அவதானித்து மேலே தரப்பட்டுள்ள தொடர்புகளுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. ●●●●● = ☒☒☒☒◆◆
2. ●●●☒◆ = ◆◆●☒
3. ☒☒●☒◆ = ◆◆●●

மிக முக்கியம் : 2023 செப்டெம்பர் 10ம் திகதி பாடசாலையிலிருந்து விடையளித்தல் வேண்டும்.

# சிசு சவிய 2023

5

## மாணவர்களுக்கான கைக்கோர்ப்பு

ஐந்தாம் தர மாணவர்களுக்காக நடாத்தப்படும் மாதிரி பரீட்சை

சப்பிரகமுவ மாகாணம்

## முன்னோடிப் பரீட்சை - 5

**வினாத்தாள் I I** **1 மணித்தியாலம் 15 நிமிடம்**

பெயர் :..................................................................................................

## சப்பிரகமுவ கல்வி திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் கையளிப்பு

பரீட்சார்த்திக்கான அறிவுறுத்தல்,

- உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை மேலே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.
- அது போன்று மூன்றாம் பக்கத்திலும் உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன .எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை எழுதுக .
- கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.
- விடை எழுத வேண்டிய வினாக்களின் விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

## விசேட அறிவித்தல்கள்

**பாடசாலை அதிபர் / ஆசிரியர்களுக்கு,**

- இவ்வினாப்பத்திரத்தை பிரதியிட்டு 2023 10. 10ம் திகதி உங்கள் பாடசாலையின் தரம் 05 சகல மாணவர்களுக்கும் வழங்குங்கள்.
- வினாப்பத்திரம் தொடர்பாக சந்தேகங்கள், பிரச்சினைகள் இருப்பின்தங்களது கோட்டத்திற்கு பொறுப்பான ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர், வலயத்தின் ஆரம்பக்கல்விப் பணிப்பாளர் மாகாண ஆரம்பப்பிரிவிற்கு அழைத்து ஆலோசனைகளை பெறுங்கள்.
- விடைப்பத்திரம் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- வேறு மாகாண மாணவர்களும் இவ்வினாப்பத்திரத்தின் பயனைப் பெறலாம்.
- இவ் வேலைத்திட்டம் தொடர்பான தங்களின் ஒத்துழைப்பிற்கு நன்றி.

- மாகாண பணிமனையினால் வழங்கப்பட்டுள்ள பகுப்பாய்விற்கு அமைய புள்ளிகளை பதிவு செய்யுங்கள்.
- 2023 10. 10ம் திகதி பாடசாலையிலிருந்து விடையளிக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கவும்.

| வினாத்தாள் 1 | வினாத்தாள் 11 |
|---|---|
| 1மணித்தியாலம் | 1மணித்தியாலமும் 15 நிமிடமும் |

- புள்ளி பகுப்பாய்வின் பின் மாணவர்களுக்கான இனங்காணப்பட்ட மேலதிக கற்றல் மேம்பாடுகளை மேற்கொள்க.
- இவ்வினாப்பத்திரத்தை எழுத சந்தர்ப்பம் இல்லாத மாணவர்களுக்கு பிரிதொரு நாளில் வழங்கவும்.

**சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பக்கல்விப்பிரிவு**

1. கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

கமலா அன்று வீட்டுக்கு வரும்போது இருள் சூழ்ந்து விட்டது.வீட்டை சுற்றி வழமைக்கு மாறாக வீசும் ஒரு ஒளி தொலைவிலிருந்தே தென்பட்டது.கமலா வானத்தை பார்த்தாள். வுானில் பிரகாசமான நிலவு தென்பட்டது. நட்சத்திரங்கள் மின்னுகின்றன.அவள் மீண்டும் சந்தேகத்துடன் வீட்டை நோக்கி பார்த்தாள். வெளியே ஒளிர்ந்து கொண்டிருக்கும் மின்குமிழொன்று அவளது கண்களில் பட்டது. வீட்டுக்கு மின்கம்பங்கள் பொருத்தப்பட்ட நாளில் இருந்து இந்த ஒளி கிடைக்கும் வரை கமலா விரல்களை எண்ணிக்கொண்டு தான் இருந்தாள்.

1. கமலாவின் கண்களில் பட்டது என்ன? ..................................................................
2. வானில் எவை மின்னின? .......................................................
3. " கமலா வானத்தை பார்த்தாள் " இவ் வாக்கியத்தை நிகழ்காலத்தில் எழுதுக.

   ..........................................................................................................................................
4. இரண்டு அரவுகள் அடுத்தடுத்து வந்துள்ள சொல் ஒன்றை பந்தியிலிருந்து தெரிவ செய்து எழுதுக.

   ..........................................................................................................................................
5. அடைமொழிச் சொல் ஒன்றை பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

   ..........................................................................................................................................
6. எதிர்கருத்து சொற்களை எழுதுக. பூமியில் - ........................................................

2. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலை தொடர்பு சரியாயின் (✓) எனவும், பிழையாயின் பிழை (×) எனவும் எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளமிடுக.
   1. பட்சிகளின் இனிய கானம் சூழலை இனிமையாக்குகின்றன. ( )
   2. காலைக்காட்சி மனதுக்கு இனிமையானது. ( )
   3. பசுவும், கன்றும் புற்றரைகளை நோக்கி செல்கின்றது. ( )
   4. பனித்துளிகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின. ( )

3. உயர்திணை, ஒருமை, பெண்பால், பெயர்ச்சொல்ளை தெரிவு செய்க.
   1. மானிடன் 2. பெண்கள் 3. அரசி

4. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
   கூறிய / அறிவுரைகள் / மனதில் / ஆசிரியர் / பதிந்துள்ளன.

   ..........................................................................................................................................

5. ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி நிகழ்காலத்தில் எழுதுக.
   1. அது கூட்டை நோக்கி பறந்து சென்றது. ...........................................

6. தனிச்சொல்லை எழுதுக.
   1. சுதந்திரமற்று வாழ்பவன் - ......................................................
   2. அரண்மணையில் பெண்கள் வசிக்குமிடம் - ...................................

7. வேறுபட்ட சொல்லை இணங்கண்டு கோடிடுக.
   1. புகழ், இகழ், பாராட்டு
   2. கர்வம், பொறாமை, செருக்கு

8. பொருத்தமான எழுவாய் சொல்லை எழுதுக.

கண்களில் இருந்து கண்ணீர் கசிந்தது. எழுவாய் - ……………………………………

தாமரை வாடியதும் அல்லிப்பூ மலர்ந்தது. எழுவாய் - …………………………………..

9. பொருத்தமானதின் கீழ் கோடிடுக

1. ( கைமாறு, கைம்மாறு) கருதாமல் பிறருக்கு உதவுவது நன்று

10. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் உள்ள சொற்களை வகைபடுத்தி எழுதுக.

அழுத பிள்ளை பால் குடிக்கும்.

எழுவாய் - ………………. செயற்படுபொருள் - ………………….. பயனிலை - …………………..


11. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.


1. குழந்தைகளே இங்கு வாருங்கள்

12. **ஆங்கில சொற்களுக்குரிய தமிழ் சொல்லை எழுதுக.**

1. Thread - ........................................... 2. Canteen - ..........................................

13. **கீழ்வருவனவற்றுக்கான ஆங்கில சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

1.  ..................................

2.  ..................................

கீழுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்கள் அமைக்க.

1. many / are / there ? / How / flowers

.......................................................................................................................................

2. my / is / This / sister / younger

.......................................................................................................................................

14. “ கீரீடாபிடிய” என்ற சிங்கள பதத்திற்கான தமிழ் சொல்லை எழுதுக.

.......................................................................................................................................

15. கீழுள்ள வாக்கியத்தை சிங்களத்தில் கூறும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

எனக்கு தண்ணீர் வேண்டாம் - ................................................................................

16. 1. ‘இருபத்தெட்டாயிரத்து ஒன்பது’ இலக்கத்தில் எழுதுக …………

2. 57709, 57815 இரண்டு எண்களுள் பெரிய எண்ணை எண்பெயரில் எழுதுக..............................................................................................................

3. சிறிய எண்ணை வகைக்குறிக்க. -……………………………………………

17. இறங்குவரிசைப்படுத்துக. 38594 , 38954 , 39143 - .................... ...................... ........................

18. எண்கோலத்தை இனங்கண்டு அடுத்துவரும் 4 உறுப்புக்களை எழுதுக.

95 , 103 , 111 , 119 , ................. , ................. .................... , .......................

19. பழச்சாறு உற்பத்தி நிலையமொன்றின் தகவல் கீழே தரப்பட்டுள்ளது.


| மாதம் | தோடம்பழம் | மாம்பழம் |
|---|---|---|
| மார்ச் | 2873 | 3640 |
| ஏப்ரல் | 1458 | 2937 |

1. மார்ச் மாதத்தின் மொத்த பழச்சாறு உற்பத்தி எவ்வளவு?........................................
2. ஏப்ரல் மாதத்தை விட மார்ச் மாதத்தில் உற்பத்தி செய்த பழச்சாறுகள் எத்தனை?..........


20. 824 புத்தகங்கள் 4 பெட்டிகளில் அடுக்கப்பட்டது. ஏனின் ஒரு பெட்டியிலுள்ள புத்தகங்களின் எண்ணிக்கை யாது? ........................................................

21. ஒரு பாத்திரம் கொள்ளும் நீரின் அளவு 3 லீற்றர் ஆகும். அதில் 1*l* 350*ml* நீர் உள்ளது எனின் பாத்திரம் நிறைய இன்னும் எவ்வளவு நீர் தேவை?............................................

22. பொதி ஒன்றின் நிறையை அளவிடும் போது தராசுத்தட்டில் கீழ்வரும் படிகள் வைக்கப்பட்டன எனின் பொதியின் நிறை யாது? .............kg................. g




23. கீழ்வரும் திண்ம வடிவத்தின்



1. பெயர்.............................................
2. முகங்கள்.......................................
3. விளிம்புகள்....................................


24. ரூபா 17.50 பெறுமதியான பேனை ஒன்றையும் ரூபா 40.00 விலையுள்ள அப்பியாசக் கொப்பி ஒன்றையும் வாங்க ரூபா 500.00ஐ கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

ரூபா ......................... சதம் ..........................

25. மு.ப 6.45ற்கு கொழும்பில் புறப்பட்ட பேரூந்து பி.ப 4.15ற்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

1. யாழ்ப்பாணத்திற்கு வந்தடைந்த நேரத்தை 24மணித்தியால கடிகார நேரத்தில் குறிப்பிடுக. ..................................
2. பயணத்தை சென்றடைய எடுத்த நேரம் யாது? மணி ................. நிமி .................


26. 1. கீழுள்ள உருவில் 0.3ஐ நிறந்தீட்டுக.




2. நிறந்தீட்டப்படாத பகுதியை பின்னத்தில் தருக.................................
3. மங்குஸ்தான் 48 காய்கள் உள்ளன. அதில் ¾ பகுதி பழுத்துள்ளன. பச்சையான காய்கள் எத்தனை? .......................

27. கீழுள்ள உருக்களுக்கு சமச்சீர்அச்சு வரைக.

1.




2.



28. ABC ஆகியன மூன்று நகரங்களாகும். Aயிலிருந்து B ஊடாக C வரை உள்ள பாதையின் 24km 300m நீளம் ஆகும். Aயிலிருந்து B வரை 13km 255m நீளம் எனின் Bயிலிருந்து C வரையான பாதையின் நீளம் எவ்வளவு? ..................................................

29. வரைபை அவதானித்து விடையளிக்குக.
குறிப்பிட்ட ஒரு தினத்தில் விற்கப்பட்ட பத்திரிகைகள் பற்றிய தகவல் கீழே தரப்பட்டுள்ளது.




1. ரதன் விற்ற பத்திரிகையின் அரைவாசியை சதன் விற்றான்.அதனை வரைபில் குறித்துக் காட்டுக.

2. விற்கப்பட்ட மொத்த பத்திரிகைகள் எத்தனை?......................

3. சமனாக பத்திரிகை விற்றவர்கள் எத்தனை பேர்?......................

( 30 புள்ளிகள் )

**අංක 33 සිට 62 තෙක් ඇති ප්‍රශ්නවලට ගැළපෙන නිවැරදි පිළිතුර තෝරා යටින් ඉරක් අඳින්න.**

30. உணவாக உட்கொள்வதற்கு ஏற்ற உணவா? என்பதைப் பரிசீலனை செய்பவர்,
1. பொது சுகாதார பரிசோதகர்
2. சுவை பரிசோதகர்
3. பொலிஸ் பரிசோதகர்

31. “ஆன கட்டி ஏலேலப்படி சேர்க்குழப்பி...” என்பது,
1. தோணிப்பாடல்
2. உழவுப்பாடல்
3. சேனைப்பயிர்ச் செய்கைப்படல்

32. இலங்கையை ஆங்கிலேயர் முழுமையாக கைப்பற்றிய ஆண்டு,

1. 1948 2. 1815 3. 1915

33. சேனைப் பயிர்ச் செய்யும் இடங்களில் பயிரிடப்படும் பயிர்த்தொகுதி,
1. குரக்கன் , சோளம் , இறுங்கு
2. திணை , வாழை , பாசிப்பயறு
3. காராமணிப்பயறு , எள்ளு , உழுந்து

34. நாளாந்த வாழ்க்கையில் கழித்தொதுக்கும் பொருள்களைக் கொண்டு பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான சாடிகள் அமைத்துப் பயிர்களை வளர்ப்பது,
1. மாற்றுமுறைப் பயிர்ச்செய்கை
2. ஒருங்கிணைந்த விவசாயம்
3. சேனைப்பயிர்ச்செய்கை

35. ஆழிப்பேரலை ஏற்படுத்துவதற்கு முதலில் ஏற்படும் இயற்கை இடர்,
1. கடலினுள் புவிநடுக்கம் ஏற்படல்.
2. கடலிலும் தரையிலும் கடுங்காற்று வீசுதல்.
3. தரையில் புவிநடுக்கம் ஏற்படல்.

36. உலோக கரண்டியின் மீது சிறிது நீரை ஊற்றி மெழுகுதிரி சுவாலையில் பிடிக்கும் போது நடைபெறாதது



1. நீர் சூடாகுதல்
2. உலோகக் கரண்டி வெடித்தல்
3. நீர் ஆவியாதல்

37. இலங்கை தொடர்பான கூற்றுக்களில் தவறானது,
1. இந்து சமுத்திரத்தினால் சூழப்பட்ட ஒரு தீவாகும்.
2. ஆசியாக் கண்டத்தில் இந்தியாவிற்குத் தெற்கே அமைந்துள்ள நாடாகும்.
3. பசுபிக் சமுத்திரத்தினால் சூழப்பட்ட குடா நாடாகும்.


38. நீருள்ள பாத்திரத்தில் ஐஸ்கட்டியை இடும் போது அவதானிக்க கூடியது,
A – நீரின் வெப்பநிலை குறைந்து குளிர்ச்சியடையும்
B – கண்ணாடிப்பாத்திரம் குளிர்ச்சியடந்து கண்ணாடி பாத்திரத்திற்கு வெளியே நீர்த்துளிகள் தோன்றும்.

1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. A , B ஆகிய இரண்டும்

39. அலுமினியப் பாத்திரத்தில் உணவு தயாரிக்கும் போது சேர்ப்பதற்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்கள்,
1. பழப்புளி , எலுமிச்சை , வினாகிரி
2. எலுமிச்சை , கறிவேப்பிலை , ஏலக்காய்
3. எலுமிச்சை , வினாகிரி , இஞ்சி

40. புத்தம் புதிதாக விளம்பரம் செய்யப்படும் உணவுப்பொருள் தொடர்பில் அதிகம் கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம் அல்லாதது,
1. சீனியின் செறிவு
2. நிறமூட்டிகள் செயற்கையான பொருட்களின் பயன்பாடு.
3. காலாவதித் திகதி

41. விதை ஒன்று முளைக்கும் கட்டங்களை ஒழுங்குமுறைப்படி காட்டும் விடை,




A B C D E F

1. A, B, C, D, E, F 2. B , A, D, C, F, E 3. B , E , A, C , F , D

42. மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்தினுள் விளைச்சல் தரக்கூடிய பயிர்வகைகளின் கூட்டமாக அமைவது,

1. அவரை , பயற்றை , வெண்டி
2. பாகல் , புடோல் , மாதுளை
3. திராட்சை , பீர்க்கு , தக்காளி

43. கீழுள்ள பரிசோதனையில் வித்து முளைக்க ஏதுவான காரணி,




1. சூரியஒளி, காற்று 2. மண், சூரியஒளி 3. காற்று, நீர்

44. தங்கக் கூரையுடன் காணப்படும் வழிபாட்டுத் தலம் பின்வருவனவற்றுள் எது?

1. இசுறுமுனி 2. எம்பக்க 3. துலதா

45. குறைந்த சக்தியை பயன்படுத்தி துவிச்சகரவண்டியில் செல்ல பயன்படுவது



1. பற்சில்லு இரண்டையும் தெரடுத்துள்ள சங்கிலி
2. சைக்கிலின் டயர் இரண்டும் சங்கலியும்
3. பெரிய சிறிய பற்சில்லுடன் இணைக்கப்பட்ட சங்கிலி

46. சூரியக்கிரகணம் ஆரம்பிக்கும் போது,

1. சூரியன் படிப்படியாக மறைந்து சூழல் கருமையடையும்.
2. சூரியனின் பிரகாசம் படிப்படியாக அதிகரித்து வெப்பம் குறைவடையும்.
3. சூரியன் ஒரே தடவையில் மறைந்து சூழல் பிரகாசமாகும்.

47. எமது நாட்டில் அந்நியர் ஆட்சியின் அடையாளங்களாகக் காணப்படுபவை,

1. காலி , யாழ்ப்பாணக் கோட்டைகள்
2. யாப்பகூவ , இசுறுமுனிய
3. மின்னேரியாக்குளம் , பசவக்குளம்

48. வீதிச் சமிக்ஞை விளக்குத் தொகுதியில் காணப்படும் விளக்குகள் மேலிருந்து கீழாகக் காணப்படும் ஒழுங்குமுறை,

1. சிவப்பு , செம்மஞ்சள் , பச்சை
2. செம்மஞ்சள் , பச்சை , சிவப்பு
3. பச்சை , செம்மஞ்சள் , சிவப்பு

49. 1884 ல் பிறந்து வெஸ்லியன், காலி ரிச்மன் வித்தியாலயத்தில் கல்வி பயின்று தேசிய வீரர் பட்டியலில் இடம் பிடித்தவர்.

1. C.W.W கன்னங்கர
2. டி.பி ஜயா
3. S.M செனவிரத்ன

50. முதலுதவிப் பெட்டியில் பேணுவதற்குப் பொருத்தமற்ற பொருள்,

1. தொற்றுநீக்கி 2. பிணைகருவி 3.கட்டுந்துணி

51. கலிச்சல் நோயை ஏற்படுத்தும் பிராணி,

1. நுளம்பு 2. எலி 3.இலையான்

52. நாம் விலை கொடுத்து வாங்கும் பண்டங்களின் தரச்சான்றிதழ்கள் இரண்டு,


1. ISO – OSL 2. LSO – VPN 3. ISO – SLS

53. உணவுப்பொருட்களை அசுத்தமடையச் செய்யும் சூழற்காரணி அல்லாதது,

1. தூசிபடிதல்
2. அறைவெப்பநிலை
3. அதிக சூரிய ஒளிபடுதல்

54. தேசப்படங்களின் பாதைக்குறியீடுகளின் நிறங்கள் முறையே


1. சிவப்பு, ஊதா, கறுப்பு
2. நீலம், சிவப்பு, கறுப்பு
3. ஊதா, சிவப்பு, கறுப்பு




55. காற்றின் மூலம் பரவலடையும் வித்துக்களாவன,

1. முருங்கை , ஆடையொட்டி
2. துத்திரி , எண்ணை
3. சீதேவியார் செங்கலுநீர் , எருக்கலை

56.




இச்செயற்பாட்டின் போது திரையில் காணக்கூடியது,

1. சூரிய வெளிச்சம்
2. வானவில்லின் நிறம்
3. சூரியனின் நிறம்

57. சிறுவர் துஷ்பிரயோக பாதுகாப்பு அவசர தொலைபேசி இலக்கம்,

1. 1990 , 118 2. 1929 , 119 3. 1956 , 119

58.




பனிக்கட்டி மெதுவாக கரையும் பாத்திரம் எது?

1. A 2. B 3.C

59. ‘‘ஈவினிங் ஸ்டார்’’ என அழைக்கப்படும் கோள் பின்வருவனவற்றுள் எது?

1.வியாழன் 2.வெள்ளி 3.சனி

60. ‘தினமும் காலையில் உடற்பயிற்சி செய்வது எமக்கு பயன் உள்ளதாகும். இதனால்தான் அரசதிணைக்களங்கள், பாடசாலைகளில்காலை உடற்பயிற்சிகளை தினமும் செய்ய வேண்டும் என அரசு வலியுறுத்துகிறது. “ **மாணவர்களாகிய எங்களுக்கு உடற்பயிற்சி ஏன் அவசியம்? ”** என்பது பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.( ஒவ்வொரு வாக்கியமும் ஐந்துக்கு குறையாத சொற்களை கொண்டிருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்புகளும் எழுத்துகூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

1……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

2……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

3……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………